# இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து!

★

## என் இஸ்லாத்தில் சேர வேண்டும்?

சூத்திரனாயிருக்க
வெட்கப்படுகிறேன்.

★

(பெரியார் ஈ. வெ. ரா.)

★

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.
1947
விலை அணா 2.

# இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து

---

## பெரியார் ஈ. வெ. ரா. சொற்பொழிவு

★

திராவிட உத்தியோகஸ்தர்கள் எஸ். ஐ. ஆர். (எம்ப்ளாயிஸ் அசோசியேஷன்) சங்கத்தார் சார்பாகப் பெரியாருக்குத் திருச்சியில் 18-3-47ந் தேதி 1080 ரூபாய் கொண்ட பணமுடிப்பு ஒன்று அளிக்கப்பட்டது. பின்னர் ரயில்வேயில் குமாஸ்தாக்கள் ஸ்டேஷன் மாஸ்டர் முதலிய அலுவல் பார்க்கும் திராவிடர்களின் நிலையைப் பற்றி ஒரு நீண்ட (மிமோராண்டம்) முறையீட்டைக் குறிப்பிட்ட ஒரு விண்ணப்பம் அளிக்கப்பட்டு, அதைப்பற்றி விசாரித்து, குறை பாடுகள் நீங்கும்படியான உதவிசெய்யவேண்டுமென்று வேண்டிக் கொள்ளப் பட்டிருந்தது.

அந்த முறையீட்டைப் பெரியாரிடம் கொடுப்பதற்குத் தோழர் டி. பி. வேதாசலமவர்களைச் சங்கத்தார் வேண்டிக்கொண்டதற் கிணங்க வேதாசலமவர்கள் நிலைமையை நன்றாய் விளக்கிக்கூறிப் பெரியாரிடம் கொடுத்தார்.

கூட்டத்திற்குச் சுமார் 5000 மக்கள் வந்திருந்தனர்.

நிதியையும் முறையீட்டையும் பெற்றுக்கொண்டு பெரியார் நன்றி செலுத்துகையில் பேசியதாவது:-

எஸ். ஐ. ஆர். ரயில் நிலையத்தில் அலுவல்பார்க்கும் தோழர் களே! அவர்களது அனுதாபிகளே! திராவிடர் கழக நிதிக்கு நீங்கள் அன்புடன் 1080 ரூபாய் அளித்தமைக்கு எனது நன்றி உரித்தாகுக.

அலுவலில் உங்களுக்குள்ள குறைபாடுகளைப்பற்றிய முறையீட்டைப் பார்த்தேன். தலைவர் வேதாசலம் அவர்கள் அதை மக்களுக்கு மிக நன்றாய் விளக்கிச்சொன்னார். அதிலிருந்து நானும் பல விஷயங்கள் அறிந்துகொண்டேன்.

உங்கள் முறையீட்டில் குறிப்பிட்டு இருக்கும் முக்கிய விஷயங்கள் 5, 6 ஆகும் அவை,

1. சிப்பந்திகள் நியமிக்கும் கமிட்டி
2. தெரிந்தெடுக்கும் முறை
3. சம்பளம்
4. பிரமோஷன்
5. உங்களை நடத்துகிற தன்மை
6. இப்போது முக்கிய உத்தியோகங்களில் இருக்கும் மக்களின் வகுப்புவாரி எண்ணிக்கை விகிதம் ஆகும்.

## உத்தியோகக் கமிட்டி

இவற்றுள் முதலாவது உத்தியோகம் நியமிக்கும் கமிட்டியைப் பற்றிப் பேசத் துவக்கினால் உடல் பதறுகிறது, இரத்தம் கொதிக்கிறது, முட்டாள்தனமான ஆத்திரங்கூடப் பொங்குகிறது. சுயராஜ்யம் வந்தகாலத்தில் உத்தியோக வினியோகக் கமிட்டி இந்த யோக்கியதையில் நியமிக்கப்படுகிறதென்றால் இந்த அரசாங்க முறையை எந்த மடையனும் சுயராஜ்ய ஆட்சிமுறை என்று சொல்லமாட்டான். இந்த நாட்டில் உள்ள எல்லா இன, வகுப்பு மக்களுக்கும் ரயில்வே நிர்வாகம் பொதுவாகும். எல்லா பதவியும் பெற உரிமை உண்டு. எல்லா முக்கிய வகுப்பாரும் அந்தக் கமிட்டியில் இடம் பெற வேண்டியது யோக்கியமும் நாணயமுமாகும். ஒன்று இரண்டு பெரு வகுப்புக்குச் சரியான பிரதிநிதித்துவம் இல்லாவிட்டாலும் முக்கியமானதும், அடிப்படையானதும், மொத்த ஜனத்தொகையில் 100க்கு 80, 90 வீதம் எண்ணிக்கைக்கொண்ட வகுப்புக்கும் பிரதிநிதித்துவமே இல்லாமல் மொத்த ஜனத்தொகையில்



100க்கு 3 பேர்களாகவும் மற்ற மக்களையெல்லாம் கீழ்ஜாதி மக்கள், இழிமக்கள், தகுதியற்ற மக்கள் என்று பித்தலாட்டமாகவும் அயோக்கியத்தனமாகவும் கூறிக்கொண்டு மனிதச் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் கேடுசெய்து கொண்டிருப்பதுமான வகுப்புக்கே எல்லா ஸ்தானங்களையும் கொடுத்து மக்களைத் தெரிந்தெடுக்கச் சொல்லுவதென்றால் இது நம்மைக் கொடுமைப்படுத்தி அலட்சியப் படுத்தி இம்சிப்பதில் கவலையற்று அகம்பாவமாகவும்ஆணவமாகவும் நடந்துகொள்ளும் முறையைச் சர்க்கார் துணிந்து, கையாளுகிறது என்று அர்த்தமாகவில்லையா என்று கேட்கிறேன்.

## கமிட்டி அங்கத்தினர்

இரயில்வே சர்வீஸ் கமிஷன் கமிட்டி அங்கத்தினர் தன்மையைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள். இது S. I. R., M. S. M. ஆகிய இரண்டு இரயில்வேக்கும் உத்தியோகஸ்தர் நியமிக்கும் கமிட்டியாகும், அதாவது:

1. ராவ்பகதூர் R. மாதவாச்சாரியார். கமிட்டிக்கு இவர் தலைவர்.
2. ராவ்பகதூர் M. ராமச்சந்திரர் (அய்யர்)
3. T. K. சுந்தரராஜ அய்யங்கார்
4. கான்பகதூர் அப்துல் கரீம்.
5. தோழர் K. சுந்திரராஜம் (அய்யர்)

இந்த ஐவரில் நால்வர் பார்ப்பனர். (அதிலும் பெரும்பாலும் அய்யங்கார்கள்). மீதியுள்ள ஒருவர் சாயபு என்பவர். அதாவது முஸ்லிம் என்று சொல்லப்பட்டாலும் அவரும் முக்கால் பார்ப்பனர், கால் முஸ்லிம் என்று இங்கு சொல்லப்பட்டது. அதாவது கான்பகதூர் அப்துல் கரீம் சாயபு அவர்கள் பார்ப்பன மதமாகிய தியாசபியைச் சேர்ந்தவர். பார்ப்பன மாதை மணம் செய்து கொண்டவர். அந்த மாது கமிட்டித் தலைவருக்குச் சொந்தமான மாதாம். அன்றியும் இவர் இன்றைய அரசியலில் Dr. T. S. S. ராஜ

னுக்கு அடுத்தப்படியாகப் பச்சைப் பார்ப்பனீயத்தைக் கொடுங்கோன் முறையில் நெஞ்சில் சற்றும் ஈவுஇரக்கமில்லாமல் திராவிடர் மேல் செலுத்தும் தோழர் கே. சந்தானம் என்னும் ஐயங்கார் என்னும் பார்ப்பனருக்குச் சகலையாம்.

எனவே கமிட்டியின் யோக்கியதையைப் பாருங்கள். இவர்களால் பார்ப்பனரல்லாத சமுதாயத்துக்கு, திராவிடர்களுக்கு எதாவது கடுகளவு நீதியோ, கருணையோ, உரிமையோ கிடைக்கும் என்று எவர்தான் கருதமுடியும்? இது "சுயராஜ்ய" சர்க்காரின் எவ்வளவு துணிகரமான வேலை என்று பாருங்கள்.

## சம்பளம்

இனி அடுத்த விஷயம் சம்பளவிஷயம். இந்தச் சம்பளவிஷயத்தில் சில உத்தியோகங்களை ஒவ்வொரு இலாக்காவிலும் உயர்தரம் என்று அதிகாரமும், சௌகரியமும் இருக்கும்படியும் கீழ்த்தர அதிகாரம் என்று அதிக வேலையும், குறைந்த சம்பளமும் இருக்கும்படியும் பிரித்து, உயர்தரவேலையைப் பெரிதும் பார்ப்பனருக்கே கிடைக்கும்படியாய் வழிசெய்து நல்ல சம்பளம் பெற்றுக்கொண்டு, கஷ்டப்படும் மக்களுக்கு மிகவும் பேதமுள்ளதும் நித்தியவாழ்வுக்குப் போதாததுமான சம்பளத் தன்மையில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலை தானாகவே பார்ப்பனர்களை மேலுத்தியோகஸ்தர்களாகவும், மற்றவர்களைக் கீழுத்தியோகஸ்தர்களாகவும் ஆக்கிவிடுகிறது.

மாதம் ரூ. 500 சம்பளம் வாங்கிய மந்திரிகள் இன்று மாதம் 1500 ரூபாய் வாங்குகிறார்கள். பெரும்பாலான நாள்களில் ஊரார் வீட்டிலிருந்து சாப்பாட்டில் காலத்தைக் கழித்துவிட்டுச் சம்பளத்தில் பெரும்பாகம் மீதி செய்துகொள்ளுகிறார்கள். காங்கரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் மாதம்75ரூபாய் வாங்கிக்கொண்டிருந்தவர்கள் இன்று மாதம் 150 ரூபாய் சம்பளமும், உத்தியோகம், லைசென்சு, தண்டனைரத்து, கேஸ் பின்வாங்கிக்கொள்ளச் செய்தல் முதலிய காரியங்களுக்கு மந்திரிகளிடம் சிபார்சு செய்வதில் ஏராளமான



கௌரவத் தொகையும் [ஆனரேரியமும்] கமிஷனும், சன்மானமும் வாங்கி, சட்டசபை மெம்பராவதற்கு முன் வீட்டு வாடகைக் கொடுக்காமல் சண்டித்தனம் செய்துகொண்டு இருந்தவர்கள், இன்று மோட்டார் கார்கள் வைத்துக்கொண்டும் சிலர் இலட்சக்கணக்கில் பொருள் சேர்த்தும் செல்வசீமான்களாய் "லட்சிமீ புத்திரர்"களாய் இருக்கிறார்கள். இப்படியாக இவர்கள் மாத்திரம் இருந்துகொண்டு இரவும் பகலும் 24மணி நேரத்திலும் பொறுப்பு ஏற்று வேலை செய்யவேண்டிய திராவிட மக்களுக்கு இரயில்வேயில் இந்தக் கேவலமான சம்பள நிலையும், கண்விழிப்பும் தொல்லையும் இருக்கும்படியான மக்களுக்குக் குறைந்த சம்பளம் அதுவும் வீடு, கல்வி, வைத்தியம் வசதிபற்றிக்கூட கவலையில்லாத சம்பளம் இருப்பதென்றால் இது மனுதர்ம ஆட்சியா அல்லவா என்று யோசித்துப் பாருங்கள்.

## உத்தியோக வினியோகம்

அடுத்தபடி உத்தியோக வினியோகம். இந்த விஷயம் மிகவும் முக்கியமானதாகும். இது கண்டிப்பாய் இந்த மாகாணத்தில்வகுப்பு மக்களுக்கும் வகுப்புவிகிதம் வினியோகிக்கப்படவேண்டியதும், உத்தியோகத்துக்கு வேண்டியஅளவு கல்வி தகுதிஇருந்தால் எல்லா முக்கிய உயர்தர தனி உத்தியோகங்களும் விகிதாச்சாரம் இருக்கும்படி இருக்கவேண்டியதும் நேர்மையாகும். ஆனால் இப்போது சர்க்கார் உத்தியோகம்கூட எவ்வளவோ பித்தலாட்டகரமாகத்தான் கொடுக்கப்பட்டுவருகிறது. முக்கிய உத்தியோகம் கொடுக்கப்படுவதில் எந்த வகுப்பார் தகுதியாய் இருந்தாலும் முதலாவதாகப் பார்ப்பனர்தான் தெரிந்தெடுக்கப்படுகிறார். அதற்குப் பெருத்தஎதிர்ப்பு இருந்தால் அது வெள்ளையருக்கு அளிக்கப்பட்டுவிடும். வெள்ளையருக்குக் கொடுக்க முடியாததாய் ஏற்பட்டால் வேறு மாகாணத்தானுக்குக் கொடுக்கப்பட்டுவிடும். அவனுக்குக் கொடுக்கவும் வசதிப்படாததானால் ஒரு கிருஸ்தவருக்கும், அவருக்கு எதிர்ப்பு இருந்தால் ஒரு முஸ்லிமுக்கும் அதுவும் தடைப்பட்டால் ஒரு மங்களூர் காரனுக்கும்

அதற்கும் தடைப்பட்டால் ஒரு மலையாளிக்கும் அதற்கும் தடைப்பட்டால் ஒரு ஆந்திரருக்குமாவது பெரிதும் வழங்கப்படுகிறதே தவிர சுலபத்தில் ஒரு தமிழனுக்கு அவன் எவ்வளவு தகுதியானவனாய் இருந்தாலும் வழங்கப்படுவதில்லை. சில சமயங்களில் தமிழனுக்கு வழங்கப்படவேண்டிய அவசியம் வந்தபோது "அந்த உத்தியோகமே இருக்கவேண்டியதில்லை" என்று செய்யப்பட்டிருக்கும் விஷயம் எனக்குத் தெரியும்.

உத்தியோக வினியோக விஷயத்தில் இன்றைய சென்னை அரசாங்கம் முன்னைய வகுப்புவாரி உத்திரவை மிகமிகப் பரிகாசமாக ஆக்கிவிட்டது. நமது ஐகோர்ட்டைப் பாருங்கள்! கலக்டர்களைப் பாருங்கள்! மற்றும் மாகாண அதிகாரிகளைப்பாருங்கள்! மற்றும் மாகாண அதிகார வினியோகங்களைப் பாருங்கள்! மனுதர்ம சாஸ்திரத்தை அனுசரித்தே இதுவரை நடந்துவந்திருக்கிறது இதில் பார்ப்பனர்கள் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். வெள்ளையர் காலத்திலும் இது மாற்றமடையவில்லை.

காங்கரசும் சுயராஜ்யமும் இராமராஜ்ஜியமும் திராவிடர்கள் சூத்திரத்தன்மையில் இருந்து மனிதத்தன்மை பெறாமல் இழிநிலையில் அடிமை நிலையில் இருப்பதற்கு ஏற்பட்டவைகளே தவிர வேறு எந்தக்காரியத்துக்கும் ஏற்பட்டதல்ல என்பதை நான் எங்கும் நிரூபிப்பேன். இல்லாவிட்டால் தேவைக்கு மேற்பட்ட யோக்கியதாம்சத்தை ஏற்படுத்திக்கொண்டு திராவிடனுக்கு மாத்திரம் தகுதி திறமை என்கின்ற முட்டுக்கட்டை ஏன்? முஸ்லிமுக்குத் தகுதி திறமை வேண்டியதில்லை. வெள்ளையனுக்கு வேண்டியதில்லை, சட்டைக்காரர்களுக்கு வேண்டியதில்லை! வேறு மதத்திற்குப் போய்விடுவேன் என்று மிரட்டுகிற ஆதித்திராவிடர்களுக்குத் தகுதி திறமை என்பவை திராவிடனுக்கு இருக்கவேண்டும் என்றபடி வேண்டியதில்லை. ஆனால் திராவிடனுக்குப் பள்ளியில் சேர்க்கப்படுவதற்கே தகுதி திறமை வேண்டும் என்று சுயராஜ்ய பார்ப்பனப் பிரதம மந்திரி சர்க்காரில் உள்ள திராவிட கல்வி மந்திரியைக்



கொண்டே திட்டம் செய்வாரானால் மனுதர்மமும் விபூஷணத் தன்மையும் எவ்வளவு பலாத்காரமாகக் கையாளப்படுகிறது என்று பாருங்கள்.

## பிரமோஷன்

இனி அடுத்த விஷயம் பிரமோஷன் என்பதாகும். இதில் பார்ப்பனர் தந்திரம் மிகமிகக் கண்டிக்கப்படத்தக்கதாகும். தலைவர் வேதாசலம் அவர்கள் இதைப்பற்றி நன்றாய் எடுத்துச் சொன்னார். முறைப்படிப் பிரமோஷன் (மேல் உத்தியோகம்) இல்லாததாலேயே நல்ல உத்தியோகம்பெற்ற திராவிடர் (தமிழர்)களில் பலர் இனப்பற்று அற்ற, இனத்துரோகிகளாக அளவுக்குமீறிய சுயநல அயோக்கியர்களாக ஆகிவிடுகிறார்கள். அவர்களுக்கு உத்தியோகம் வரும்படிச் செய்கிறவர்கள் நாம் என்றாலும் அவர்களுக்கு அதில் தகுதி பட்டம் கொடுத்து பிரமோஷன் செய்கிறவர்கள் பார்ப்பனர்களாக இருப்பதால் அவர்கள் பார்ப்பன தாசர்களாகவும், விபீஷணர், அனுமார்களாகவும் ஆகி நமக்குத் துரோகம் செய்யாமல் இருக்க முடியாதவர்களாக ஆகிவிடுகிறார்கள். இன்று இரயிலிலாகட்டும், சர்க்கார் பதவியிலாகட்டும் பெரிய பதவியில் இருக்கும் திராவிடர்கள் யாராவது தன்னைத் திராவிடன் என்றோ தமிழனாயிற்றே என்றோ கருதுகிறவர்உண்டா? என்று கேட்கிறேன். இதற்குக் காரணம் இவர்கள் அயோக்கியர்கள் என்பது அல்லவே அல்ல. அவர்கள் நல்ல பேர், அந்தஸ்து, உயர்வு, பெறவேண்டுமானால் பார்ப்பனர் ஆசீர்வாதம், மங்களாசாசனம், சடகோபம் பெற்றே ஆகவேண்டும்.

பார்ப்பனர் மற்றொரு தந்திரமும் இதற்குக் கையாளுகிறார்கள். அதாவது:-

ஏதாவது ஒரு பிரமோஷன் தமிழனுக்குக் கொடுக்கவேண்டுமென்று நாம் வாதாடிக் கொடுத்தாகவேண்டிய அவசியம் வந்தால் அப்போது பார்ப்பனர் ஏதாவது ஒரு கண்போன, கை போன

மொண்டி, மூடம், ஸ்குருஹுஸ், கிராக், மக்கு, அதிகப்பிரசங்கி அல்லது இரகசியதில் பல குற்றச்சாட்டுள்ள அயோக்கியன் எங்காவது இருக்க மாட்டானா? அவனைத் தேடிப்பிடித்து அவனுக்குமேல் உத்தியோகத்தைக் கொடுத்துவிட்டு அன்று முதலே அவன்மீது குப்பைச்செத்தை சேர்த்து ஒரு நாளில் குவியவைத்து நெருப்பு இட்டு,

"பார்த்தியா, பார்த்தியா திறமை, தகுதி எல்லா வகுப்புக்கும் உண்டு என்று திராவிடர்கள் வாதாடுகிறார்களே! உத்தியோகம் கொடுத்து நடந்தது என்ன?"

என்று ரிகார்டு ஏற்படுத்தி நமக்கு வெட்கம் ஏற்படும்படிச் செய்துவிடுகிறார்கள். அல்லது பிரமோஷனுக்குத் தேவை இல்லாத கடுமையான நிபந்தனைகளைத் திடீரென்று வைத்து நல்ல கெட்டிக்காரர்களையும் அறிவாளிகளையும் யோக்கியர்களையும் சலித்து எடுத்துத் தள்ளிவிடுகிறார்கள்.

உதாரணமாகக் கல்வி இலாகாவில் தோழர் அவனாசிலிங்கம் அவர்களுக்கு மந்திரிவேலை கொடுத்தார்கள். எதற்காக கொடுத்தார்கள்? "ஒருவராவது லஞ்சம் வாங்காதவர் இந்த 13மந்திரிகளில் இல்லையா" என்று யாராவது சொன்னால் நான் கண்டிப்பாய் "லஞ்சம் வாங்காதவர் அவனாசிலிங்கனார்" என்று உறுதி கூறுவேன். ஆனால் புத்திக்கும், இன உணர்ச்சிக்கும், வகுப்பு அபிமானத்துக்கும் உலக அனுபவத்திற்கும் அவருக்கும் வெகுவெகு தூரம்? நம்மை இங்கிலீஷ் படிக்கக்கூடாது என்றார். ஆனால் இந்தி கட்டாயம் படி என்றார். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் சேர்க்கப்படுவதற்குக்கூடச் சட்டப்படி உண்டான தகுதிக்குமேல் தகுதியும் திறமையும் வேண்டுமென்றார். அந்தத் தகுதி இங்லீஷிலும் இருக்கவேண்டும் என்றார். இப்படிப் பல முட்டாள் தனமான காரியங்களைப் பார்ப்பனர் சொன்னபடி நடந்து அவர்கள் கையெழுத்து வைக்கும்படி சொன்ன இடத்தில் வைக்கிறார்.



நமக்கு எவ்வளவு கேடு? நமது பின் சந்ததிக்கு எவ்வளவு கெடுதி? இந்தப்படிப் பார்ப்பனர் செய்துவிட்டுத் தாங்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். இப்படி உத்தியோகங்களிலும் பலர் நமக்குப்பயன் படாமலும், நல்ல பேர் எடுக்காமலும், பார்ப்பனர் அடிமைகளாகி அவர்களுக்கும் பயனில்லாமல் செய்யப்பட்டு விடுகிறார்கள். இது பார்ப்பனத் தந்திரமாகும்

## நம்மை நடத்தும் மாதிரி

அடுத்தவிஷயம் நம்மை இவர்கள் நடத்தும் மாதிரி. இது உண்மையில் மோசமாகவே இருக்கிறது. பார்ப்பன மேலதிகாரிகள் நம்மவர்களை மிகமிக இழிவாய் நடத்துகிறார்கள். குற்றம் கண்டுபிடிப்பதில் மிகக் கவனமாக இருந்து அக்கிரமமான வழியில் நெஞ்சுத் துணிவோடு நம்மைக் கெடுத்துவிடுகிறார்கள்.

ஒரு சிறு உதாரணம் பாருங்கள்.

தோழர்(புலவர் கனகசபை என்னும்) பொன்னம்பலம் என்பவர் ஒரு தமிழ்ப் புலவர். அவர் சேலம் ஹைஸ்கூலில் ஒரு புலவர். அவர் சிறிது திராவிட உணர்ச்சி உள்ளவர். அந்த உணர்ச்சி என்னவென்றால் மூடம் மொக்கை இல்லாமல் சுத்தமான தமிழில் கூடியவரை பேசுபவர். இவர் பேசுவதைக் கண்டால் எந்தப் பார்ப்பானுக்கும் கோபம் வரும். வடமொழி கலப்பில்லாமல் பேசுவார். இதுதான் இவரிடம் பார்ப்பனருக்குப் பிடிக்காத காரியம்; மற்றபடி நல்ல சராசரிக்கு மேம்பட்ட திறமைசாலி யோக்கியர் என்பது என் அபிப்பிராயம்.

இவர் ஒருநாள் பள்ளி வகுப்பில் பாடம் நடத்தும்போது ஆரியர் திராவிடர் என்ற இடம் பாடத்தில் வந்த சந்தர்ப்பத்தில் விளக்கிப் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார், தலைமை உபாத்தியாயர் (ஒரு ஆரியர்) அது சமயம் வந்தவர் தலைமறைவாய் ஒண்டி சில வாக்கியங்களைக் கேட்டுக்கொண்டிருந்தவர் பாடம் முடியும் தருவாயில் வகுப்புக்குள் புகுந்து நீ, நான், என்கின்ற

ஒருமை முறையில் பொன்னம்பலத்தைக் கடிந்து இழித்துப் பேசி சமாதானம் கேட்டார். பொன்னம்பலம் அவர்கள் கோபியாமல் பொறுமையாய் நான் செய்த "குற்றத்திற்கு"ச் சமாதானம் சொல்லத் தயாராய் இருக்கிறேன். இதோ பாடபுத்தகம் இருக்கிறது. ஆனால் நீங்கள் பிள்ளைகள் எதிரில் என்னை இவ்வளவு அவமரியாதையாக ஒருமையில் இழித்துக்கூறியதற்குத் தாங்கள் காரணம் சொல்லவேண்டும். நான் இந்த மாணவர்களுக்கு ஆசிரியன் இவர்கள்முன் என்னை இப்படிப்பேசலாமா? என்பதாகக் கேட்டார். உடனே தலைமை ஆசிரியர் "நாம் ஒருவருக்கொருவர் சகோதரர் என்கின்ற முறையில் பேசினேன் கோபியாதீர்கள்" என்று பல்லைக்காட்டிக்கொண்டு தட்டிக்கொடுத்துவிட்டுப் போய்ப் பள்ளிப் பிள்ளைகளைப் பிடித்து முனிசிபல் கமிஷனருக்கு ஒரு முறையீடு எழுதிக்கொடுக்கச்செய்து அவரை வீட்டுக்குஅனுப்ப முயற்சிகள் கட்டுப்பாடாகச் செய்யப்படுகின்றதாக எனக்கு நல்ல தகவல் வந்திருக்கிறது. கமிஷனர்கள் யோக்கியதையோ நாம் சொல்லவேண்டியதில்லை. 100க்கு 75 கமிஷனர்கள் திராவிடர்களே ஆனாலும் அவர்கள் கமிஷனர்கள் ஆனவுடன் திராவிட இரத்தம் பார்ப்பன அடிமை இரத்தமாக மாறும்படி இனாக்லேஷன் செய்யப்பட்டவர்கள் (ஊசி போடப்பட்டவர்கள்) அவர்கள் பார்ப்பன ஆசிரியரைக் கண்ணியப்படுத்தித் திராவிட ஆசிரியரைக் கண்டித்து எச்சரிக்கைசெய்து அந்த முறையீட்டை முடிப்பவர்களேதவிர வேறு பார்ப்பன ஆசிரியரைக் குற்றம் இருந்தாலும் கண்டிக்கமாட்டார்கள். மற்ற இலாக்காவிலும் திராவிடர்களை ஆரியர்கள் அரசாங்கத்தார் திராவிட மேலதிகாரிகள்கூட கீழ்மையாக நடத்திமேல் உயர்வுக்குத் தகுதி அற்றவர்களாக ஆக்கி வருகிறார்கள். பல கலெக்டர்கள் திராவிட அதிகாரிகளை நடத்துகிறமாதிரி மிகமிக மோசமானதென்றே சொல்லலாம். ஏன் என்றால் ஆட்சி, மனு ஆட்சிதானே!

ஆதித்திராவிடர்களையும் முஸ்லிம்களையும் நடத்தியமாதிரியும் மிக மோசமாக இருந்து வந்தாலும் இப்போது அவர்களுக்குப்



பிரைஸ் அடித்துவிட்டது. முதல் பிரைஸ் இல்லையானாலும் நல்ல பிரைஸ். அவர்கள் நிலை உயர்த்தப்பட்டுவிட்டது. இனி அவர்களுக்குச் சரியானபடி விகிதாச்சாரமும் மேலும்கூட கண்டிப்பாய்க் கிடைக்கும். அவர்களுக்குச் சிபார்சு, குறைகளைக் கேட்க வசதிகள் ஏற்பட்டுவிட்டன.

## நாம் வர்ணம் அல்லது மதம் மாற வேண்டும்

நாம் ஒன்று பஞ்சம வர்ணத்தாராகவோ அத்லது ஆதித்திராவிடாரகவோ இஸ்லாம் மதஸ்தாராகவோ ஆனால் ஒழிய நமக்கு மான வாழ்வு நீதி வாழ்வு முற்போக்கு வாழ்வு இல்லை என்றே சொல்லுவேன். தலைவர் வேதாச்சலமவர்கள் நன்றாக விளக்கிச் சொன்னார்கள். என்னவென்றால்,

நாம் "ஆதித்திராவிடனோ முஸ்லிமோ ஆனால் ஒழிய நம்மை கவனிப்பார் இல்லை" என்றும், "நாம் முஸ்லிமானாலும் ஆக முடியுமே தவிர ஆதித்திராவிடராவதற்கு வழியே இல்லையே" என்றும் சொன்னார். அது உண்மைதான் ஆதித்திராவிடத் தாய் தந்தையருக்குப்பிறக்காமல் நாம் ஆதித்திராவிடர் என்று சொன்னால் பொய்சொன்னதாகத் தண்டித்துவிடுவார்கள்-நாம் ஏற்கனவே பிறந்துவிட்டதால் இனி ஆதித்திராவிடருக்கு எப்படிப் பிறக்கமுடியும். நமது பிள்ளை குட்டிகள் அப்படிப் பிறந்தாலும் அதைப் பார்ப்பனர்கள் கலப்புச் சாதி என்று சொல்லிவிடுவார்கள். வேண்டுமானால் முஸ்லிம் ஆக ஆனால் ஆகலாம். இது எளிது, அருணாசலம் என்ற பெயரை அப்துல் காதர் என்று மாற்றிக்கொண்டால் போதும். ஒரு முல்லா சாயபுக்கு ½ அணாவுக்குச் சர்க்கரை வாங்கிக்கொடுத்து பாத்தியா ஓதி "இலாயிலாஹா இல்லல்லாஹு முகமது இரசூலில்லா" என்றால் போதும். இதைத் தவிர வேறு வழி இல்லாத நிலைமையை நாம் எய்திவிட்டோம்.

தோழர்களே! நேற்று இதே இடத்தில் நான் சுமார் 20ஆயிரம் பேர் இடையில் நம் தலைவர் வேதாசலம் அவர்கள் தலைமை

வில் இதையே வலியுறுத்திச் சொன்னேன். நேற்று காலை நகர சபை கொட்டகையில் நடந்த டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லம் ஆண்டு விழாவில் தலைமை வகித்தபோதும் இதையே சொல்னேன். இதனால் திராவிடர்கள் இடையில் எனக்குக் கெட்டபேர் வளர்கிறது என்றுகூடச் சிலர் சொன்னார்கள். இன்னும் காலையில் சிலர் சொன்னார்கள். சிலர் என்கூடவே இருந்து கொண்டு இதைச்சொல்லி விஷமப்பிரச்சாரம் செய்கிறார்கள். எனக்கு இதைப்பற்றிக் கவலை இல்லை. எனக்கு இந்தவிதமான உணர்ச்சிக்கு இடமில்லாத, மானத்தைப்பற்றிக் கவலை இல்லாத திராவிடமக்களிடத்தில் நல்ல பேர் வாங்கவேண்டுமென்ற கவலை சிறிதுமில்லை. அப்படிப் போலி நல்ல பெயரின்மீது எனது வாழ்வு ஏற்பட்டிருக்கவில்லை. திராவிடர்களுக்கு ஏதாவது தொண்டாற்ற வேண்டும், அதில் முதன்மையாக திராவிடன் இழிவு நீங்கவேண்டும், என்கின்ற ஆசையும் கவலையுமே தவிர வேறு ஒன்றுமே எனது கவலையாக இல்லை. என் வாழ்வைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. எனக்கு வேறு அடையவேண்டிய சாதனமும் இல்லை. இன்று திராவிடனுக்கு உள்ள இழிவு என்னவென்றால் அவன் சூத்திரனாய் இருக்கவேண்டிஇருக்கும் ஹிந்துவாய் இருப்பதைத் தவிர வேறில்லை.

## ஆதித்திராவிடருக்கு வந்த யோகம்

ஆதித்திராவிடர்களுக்குத் திடீர் என்று வந்த யோகம் டாக்டர் அம்பேத்கார், "நான் இந்து அல்ல, பஞ்சமன் அல்ல, இந்து மதத்தின் எந்தப் பாதுபாட்டுக்கும் சம்பந்தப்பட்டவன் அல்ல" என்று சொன்னதால்தான். கோவில்திறக்கப்பட்டதும், "லிஸ்ட்டு கொடுங்கள் உத்தியோகம் கொடுக்கிறேன்" என்று மந்திரி கேட்பதும், "உங்களுக்கு நீதிக்குமேல், அளவுக்குமேல் நன்மை செய்கிறேன், என்னவேண்டும் கேள்" என்று பட்டேல் சொல்லுவதும், "நானும் ஆதித்திராவிடன், பங்கி" என்று காந்தியார் சொல்லுவதும்ஆன காரியங்களுக்குக் காரணம். "நான் இந்துவல்ல" என்ற



அஷ்டாக்ஷர மந்திரமேயாகும். டாக்டர் அம்பேத்காருக்கும் 5வருடத்துக்கு முன்பே நான் 1925ல் சொன்னேன். ஆனால் எனக்கு 5வருடத்துக்குப் பின்பு சொன்ன அவர்கள் வெற்றிபெற்று விட்டார்கள். ஆனாலும் அவர்கள் இனியும் இந்து அல்ல என்றுதான் வாயிலாவது சொல்லிக்கொண்டே எல்லா உரிமைகளும் பெறப்போகிறார்கள்.

முஸ்லிம்களுக்கு வந்த, வரப்போகின்ற மேன்மையும் அதனால்தான். அதாவது நாங்கள் இந்துக்கள் அல்ல, இந்திய சமுதாயம் அல்ல என்று சொல்லுவதால்தான். நான் திராவிடநாடு 1937ல் பிரஸ்தாபித்தேன். ஜின்னா சாயபு 1940ல் பாகிஸ்தான் பிரஸ்தாபித்தார். இன்று பாகிஸ்தான் அவர் காலடியில் கிடக்கின்றது. "நன்றாய் விளக்கி, தேய்த்து, கழுவி, சுத்தப்படுத்திக் கொண்டு வாருங்கள்" என்று திருப்பி அடிக்கிறார் ஜின்னா.

இந்தத் திராவிட சமுதாயத்தினர் மானங்கெட்ட சமுதாயத்தினராய், சூத்திரராய், 4ம், 5ம் ஜாதியாய், வேசி மக்கள், தாசிமக்கள், அடிமைமக்களாய், கல்வி, செல்வம், மான வாழ்வு, உழைத்த கூலிகூட இல்லாமல் மிருகங்களிலும் கேவலமாய் உரிமை இழந்து – மனிதத்தன்மை இழந்து, ஈனவாழ்வில் அழுத்தப்பட்டுக் கிடப்பதற்குக் காரணம் இந்துவாய் இருப்பதல்லாமல் வேறுஎன்ன என்றுகேட்கிறேன். உங்களை மாத்திரம் அல்ல, நம் சர்கள், அண்ணாமலை, ஷண்முகம், எ. இராமசாமிகளையும், ஜமீன்தார்களையும், மகாராஜாக்களையும் பண்டார சன்னதிகளையும், மறைமலைகளையும், பாரதிகளையும் கேட்கிறேன். இந்தச் சிறுகூட்டங்களின் மாயவாழ்வுக்கு நாம் இத்தனை கோடிபேர்கள் இந்துக்களாக [சூத்திரர்களாக] இருப்பதா என்று கேட்கிறேன்.

தோழர்களே! நமது வியாதி- நோய் (சூத்திரர்கள் வேசிமகன் என்ற நோய்) பெரிது. மிகமிகப் பெரிது. இது [Cancer] புத்து தொழுநோய் போன்றது. வெகுநாளைய நோய். இதற்கு ஒரே

ஒரு மருந்துதான். அது இஸ்லாம்தான். இதைத் தவிர வேறு மருந்து இல்லை. இது இல்லாவிட்டால் வேதனைப் படவேண்டியதுதான் தூக்க மருந்தும், போதை மருந்தும் கொண்டுநோய் இம்சைத் தெரியாமல் நாறும் பிணம்போல் கிடக்கவேண்டியதுதான். நோய் தீர்ந்து எழுந்து நடக்க இன்றைய நிலையில் இஸ்லாம் [இந்து மதம் விடுவது என்றும்] மருந்து தான், அதுதான் நாடு கொடுக்கும், நிமிர்ந்து நடக்கச்செய்யும், வீரம் கொடுக்கும் மருந்து ஆகும்.

## இஸ்லாம்

இஸ்லாம் என்றால் மகமது நபிகள் மதம் என்றோ, இங்கு லுங்கிக் கட்டிக்கொண்டு, அளந்து தாடி வைத்துக்கொண்டு இருக்கும் சாயபு, ராவுத்தர், மரைக்கார் மாப்பிள்ளை என்கின்றவர்கள் மதம் என்றோ கருதிவிடாதீர்கள். திராவிடர்கள் மதம் முகம்மது நபிக்குமுன்பு, கிருஸ்து நாதருக்கு முன்பு, புத்தமகானுக்கு முன்பு, ஆரியர்களுக்கு "கிருஷ்ணன்" "ராமன்" "சிவன்" "விஷ்ணு"க்களுக்கு முன்பு திராவிடர்களுக்கு இருந்த மதமாகும். இஸ்லாம் என்பது சாந்தி, பணிவு, பக்தி என்ற பொருள்படும்அரபுச்சொல். இஸ்லாம் என்பது சகோதரத் தன்மை என்பது: இவ்வளவுதான். 100, 200 வருஷத்துக்கு முற்பட்ட அகராதிகளைப்பாருங்கள். அரபு வார்த்தையில் சொல்லாமல் தமிழில் ஒரு கடவுள், உருவமற்ற கடவுள் வழிபாடு, சாந்தி, ஒற்றுமை, பரஸ்பர பணிவு, பக்தி, உடன் பிறப்பு என்ற தன்மைகள் கொண்ட மதம் என்றால் போதும். கடவுள் என்பது திராவிடமொழி, காட் [God] என்பது ஆங்கில மொழி, அல்லா என்பது அரபுமொழி என்பதல்லாமல் திராவிடர்களுக்கு மாறுபட்ட கடவுள் அல்ல, கொள்கை அல்ல என்பேன். மதங்களை விபூதிப்பூச்சு, நாமம், உச்சிக்குடுமைகளைக்கொண்டு நிர்ணயிப்பதுபோல் இஸ்லாத்தை. தலைமொட்டை, தாடி, லுங்கி முதலியவைகளைக்கொண்டு நிர்ணயிக்காதீர்கள். இஸ்லாத்துக்கு எஜமானர் இந்நாட்டு முஸ்லிம்கள் அல்ல. இவர்கள் இஸ்லாத்தின்



ஒரு பகுதியினர், மலையாள மாப்பிள்ளைமார் மற்றொரு பகுதியினர், ஈஜிப்ட்டார் மற்றொரு பகுதியினர், ஜப்பான் ஜெர்மன், இஸ்லாமியர்கள் மற்றொரு பகுதியினர், ஆப்ரிக்கர், நீக்ரோவர், அபிசீனியர் ஆகிய இஸ்லாமியர் மற்றொரு பகுதியினர்'. இவர்கள். இத்தனைபேருக்கும் ஒருகடவுள் அதுவும் உருவம், பெண்டு பிள்ளை, சோறு சாறு வேண்டாததும், அற்றதுமாகும் உடன்பிறப்பு, சம உரிமை, கட்டுப்பாடு இவைதான் பொது. மற்றவைகள் எல்லாம் காலதேச வர்த்தமானங்களைப் பொறுத்தது. இவை ஒன்றாய் இருப்பதால்தான் 60கோடி மக்கள் உலகில் எந்தப்பாகத்தில் இருந்தாலும் உடன் பிறப்பாய் இருக்கிறார்கள். இவர்களுக்கு உலகம் நடுங்குகிறது. நீங்கள் இந்து என்றால் உங்கள் 15கோடி மக்களுக்கு எது பொது? எங்கே மானம்? எங்கே உடன் பிறப்பு? எங்கே ஒற்றுமை? எங்கே மனிதத்தன்மை கட்டுப்பாடு? கோபித்து ஆத்திரப்பட்டு என்செய்வது?

டாக்டர் அம்பேத்கார் இப்போதைக்கு வெற்றிபெற்றாலும் இந்த ஆவேசம் அடங்கியவுடன் அவர் இந்து என்று சொல்லிக்கொள்வாரேயானால் மறுபடியும் அவர் பஞ்சம பட்டியலில் சேர்க்கப்பட்டு விடுவார்.

நாம் இந்நாட்டை இந்து நாடாக—இந்துஸ்தானமாக ஆக்குவதைவிட திராவிடஸ்தானாக அதாவது இந்தப்பெயரைப் பார்ப்பனர் சகிக்கவில்லையானால் திராவிடநாடு கொள்கையையே கொண்ட பாக்கிஸ்தான் என்ற வேறுபெயராக மாற்றிக்கொள்வதில் தப்பு என்ன?

## மதம் என்பது

"மதம்" இல்லாமல் மக்கள் வாழமுடியாது. அதாவது நான் சொல்லும் மதம் கடவுளுக்கும் மக்களுக்கும் சம்பந்தமும் மோட்சமும், விதியும், மன்னிப்பும், சன்மானமும், மேல் லோகத்தில் அளிப்பது என்கின்ற மதம் அல்ல. மற்றெதுவென்றால் மனித

னுக்கு மனிதன் மரியாதையாய், (பணிவாய்) அன்பாய், பக்தியாய், சாந்தியாய், சகோதரத் தன்மையாய், ஒற்றுமையாய், ஒழுக்கமாய் உதவியாய் வாழும் கொள்கையை உங்களுக்குப் புரிவதற்காக மதம் என்ற பழக்க வார்த்தையில் சொல்லுகிறேன். இதைச் சமுதாயக் கொள்கை என்று சொல்ல எனக்கு இஷ்டம். இதை நீங்கள் மதம் என்று சொல்லவேண்டும் என்றாலும், ஆட்சேபிக்கவில்லை. இப்படிப்பட்ட "மதம்" இல்லாமல் மனிதன் சமுதாயத்தில் வாழுவது சங்கடப்படும். ஆகையால் இந்த நாட்டில் இந்தக்கொள்கையின் பேரால் ஏற்கனவே ஒன்றுபட்டு வாழும் 10கோடி மக்களுடன் நாம் திராவிடர்கள் 4கோடிப் பேர்களில் குறைந்தது தமிழர் $2\frac{1}{2}$ கோடி பேர் சேர்ந்து $12\frac{1}{2}$ கோடிப்பேர் ஒரு கொள்கையினராய் வாழ்ந்து, மானம் பெற்று, ஈனம் ஒழித்து, மனிதத்தன்மை உரிமையுடன் வாழ்ந்தால் யாருக்கு என்ன நஷ்டம்? என்ன இழிவு? என்று கேட்கிறேன்.

## வேறு சொல்லுங்கள்

அல்லது இந்தப் பார்ப்பன அட்டூழியத்துக்கு யாராவது வேறு மருந்து சொல்லட்டும் நான் கேட்கிறேன். திராவிடநாட்டில் நாம் இஸ்லாம் ஆனால் நம் இஷ்டப்படிதான் இஸ்லாம் இருக்குமே தவிர யாரோ சாயபோ முல்லாவோ சொல்லுகிறபடி இஸ்லாம் இருக்காது. எனக்கு 10 நாட்டு முஸ்லிம்கள் அனுசரிக்கும் இஸ்லாமும் தெரியும். நாட்டு இஷ்டம் மெஜாரிட்டி இஷ்டம்தானே தவிர இந்துமதம்போல் $(3\frac{1}{8})$ மூன்றே அரைக்கால் பார்ப்பனர் 93பேர்களை எட்டி நில், நீ படிக்கமுடியாது, நீ சூத்திரன், நீ வேசி மகன், உனக்குச் சரிசமத்துவம் இல்லை, உத்தியோகம் இல்லை, பிரதிநிதித்துவம் இல்லை என்பது அல்ல இஸ்லாம், அதாவது பணிவையும், சாந்தியையும் உண்மை சகோதரத்துவத்தையும் கொள்கையாய்க் கொண்ட மார்க்கம். மற்றது எது எப்படி இருந்தாலும் ஒற்றுமை கட்டுப்பாடு கொண்ட மார்க்கம். இதை யாரும் மறுக்கமுடியாது.



நான் இஸ்லாத்துக்கு வக்காலத்துப்பேசவில்லை, பிரசாரம் செய்யவில்லை. இது உண்மை! உண்மை! முஸ்லிம்களிடம் எனக்கு உங்களை எல்லாம்விட அளவுகடந்த அன்போ, நேசமோ, நம்பிக்கையோ, கூட்டுறவோ கிடையாது. ஆனால் பார்ப்பனீயம், இந்து என்னும் பொல்லாத கொடுமையான கோரமான பாம்பைக் கொல்லுவதற்கு அல்லது அதன் விஷத்தன்மை பாதகத்திலிருந்து விலகுவதற்கு இதுதான் மருந்து. இஸ்லாத்தைச் சரியாய்த் தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் இங்கிலாந்து, ஈஜிப்ட், துருக்கி சென்று வாருங்கள்.

## திராவிடனுக்குப் பிரதிநிதித்துவமில்லை

வரப்போகும் சுயராஜ்யம் நமக்கு மகா மகா கேடானதாக இருக்கும். திராவிடர்கள் 100க்கு 75 பேர்கள் அனுமார்களாக, விபீஷணர்களாக வாழுவதுடன் தோழர் அவனாசிலிங்கம் போன்ற மற்றும் பல திராவிடர்கள், பண்டிதர்கள், சர்கள், தங்கள் பின்னால் மணிகட்டின வால் ஒட்டவைத்துக்கொண்டு, ராமபஜனை (ஆரியர் பஜனை)செய்து, ஆரியன்பின் திரிந்து, நம்மை நசுக்கப் போகிறார்கள்.

இது என்ன மானக்கேடு! என்னுடைய நாட்டில், என் வரிப் பணத்தில் எனக்காக நடக்கிற ஆட்சியில் எனக்குப் பிரதிநிதித்துவம் இல்லை, எனக்கு விகித உத்தியோகமில்லை என்றால், எனக்கு மனிதத்தன்மை இல்லை என்றால், இதற்காக ஆரியனுக்கு நான் விண்ணப்பம் போடுவதும், விழுந்து கும்பிடுவதும், கெஞ்சிக் கூத்தாடுவதும் மானமுள்ள தன்மையா என்று கேட்கிறேன். யாரோ சில துரோகிகள் சுயநல வஞ்சகர்கள் மானம் ஈனம் இல்லாமல் தங்களைப் பார்ப்பன அடிமை (இந்து) என்று சொல்லிக் கொண்டால் நாமும் இந்து (அடியேன், தாசன், நாய்க்குட்டி, அடிமை) என்று சொல்லிக்கொள்ளுவதா என்று கேட்கிறேன். இழிவு நீங்க இஸ்லாம்" (நான் இந்துவல்ல) என்கிற மந்திரம்தான் நம்மை மனிதராக்கமுடியும். இதை நான் இன்று சொல்லவில்லை, நேற்று சொல்லவில்லை. 1919, 1920 முதல் இன்றுவரை 28

வருஷங்களாகச் சொல்லி வருகிறேன். எனக்கு ஒன்றும் சொல்வாக்குக் குறைந்துபோகவில்லை. இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் இழிவு நீங்க வேறு மருந்து இல்லை. இந்த வியாதியை நீக்கும் முயர்சியில் இதுவரை எந்தப் பெரிய வைத்தியனுடைய எந்த மருந்தும் தோல்வியையே அடைந்துவிட்டது.

## உன் கதி என்ன ஆகும்?

சாயபுகளும் பதவி விகிதாச்சாரம் பெற்று, ஷெடியூல்டு வகுப்பாரும் பதவி உத்தியோகமும் கல்வி விகிதாச்சாரமும்பெற்று மீதிஉள்ளதில் பார்ப்பனர் ஏகபோகமாய் உட்கார்ந்துகொண்டால்; திராவிடனே அல்லது தமிழனே அதாவது பார்ப்பான் அல்லாத முஸ்லிம் அல்லாத, கிருஸ்தவன் அல்லாத ஆதித்திராவிடன் (ஷெடியூல்டு வகுப்பார்) அல்லாத திராவிடனே "சூத்திரனே" உன் கதி, உன் எதிர்காலம் என்ன ஆகும்? சிந்தித்துப்பார்.

அரசியல் நிர்ணய சபையில் உனக்குப் பிரதிநிதி எங்கே? ஷெடியூல்டு வகுப்புக்கு, பார்ப்பனனுக்கு, கொள்ளை அடிக்கும் வியாபாரிக்கு, கொடுமை முறை சங்காராச்சாரிக்குப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். "நான் ஏன் சூத்திரன்" என்று பதறுகிற திராவிடனுக்குப் பிரதிநிதி எங்கே? நினைத்துப்பார். மானத்தோடு சிந்தித்துப்பார். உத்தியோகம் மாத்திரம் அல்ல நமது லட்சியம். நம் இழிவு போகவேண்டும், நாம் விபீஷணன் இல்லாத சமுதாயத்தினராக வேண்டும்.

என் அன்புள்ள அருமைத் திராவிடச் சகோதரனே! இதற்கு இஸ்லாத்தைத் தவிர ஒரு மருந்து சொல். இப்போதே சொல்லாதே. வீடுபோய் தமிழ்ப் பெரியார்கள், சர் பெரியார்கள், பண்டிதப் பெரியார்கள், ஆங்கிலம் கற்றுப் பதவி வகிக்கும் வக்கீல், உத்தியோகப் பெரியார்கள், முதலானவர்களுடன் கலந்து, கட்டி அழுது முடிவுகண்டு நாளைக்குச் சொல்.

இதுவரை [கல்லுபோடாமல் கலகம் செய்யாமல் பேச இடங்கொடுத்துப் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த உங்களுக்கு 100 இஸ்லாம்.

பெரியார் பேச்சு முடிவுற்றதும் பெருத்த நீண்ட கைதட்டல்.

# ஏன் இஸ்லாத்தில் சேரவேண்டும்?

---

## மாறுபட்ட கருத்துடையவர்களுக்குப் பெரியார் பதில்

'இழிவு நீங்க இஸ்லாம்' என்ற தலைப்புக்குக் காரணமான பெரியாரின் திருச்சிப் பேச்சுக்கு வந்த பல அதிருப்தி குறிப்புகளுக்குப் பெரியார் பதில்.

பெரியார் ஈ. வெ. ரா.

தோழர்களே,

எனது 18-3-47ந் தேதி திருச்சி சொற்பொழிவையும், தலையங்கத்தையும் குடி அரசில் படித்த தோழர்கள் பலரில் சுமார் 10, 15 தோழர்கள் வரை கடிந்தும், கலகலத்தும், தயங்கியும், தாட்சண்யப்பட்டும், மிரட்டியும், பயந்தும், கண்டிப்பாயும், வழவழா என்றும் பலவிதமாய் ஆசிரியருக்கும், எனக்கும் கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள். நேரிலும் சிலர் வந்து நீண்ட சொற்போர் நடத்தினார்கள். ஆதலால் அவைகளுக்குச் சமாதானம்சொல்லும் முறையிலும், நேரில் பேசியத் தோழர்களுக்குச் சமாதானம் சொன்னதைத் தெரிவிக்கும் முறையிலும் இதை எழுதுகிறேன்.

கோபப்படாமல், ஆத்திரப்படாமல், மத மயக்கம் இல்லாமல் சிந்தித்துப்பாருங்கள்.

### ஒரு மதத்தின்மீது நமக்குள்ள மதவெறுப்புக் காரணமாகவே அந்த மத மக்கள் மீதும் வெறுப்படைகிறோம்

இன்று முஸ்லிம்கள்மீது இந்துக்களுக்கு உள்ள வெறுப்புக்குக் காரணம் இஸ்லாம் மத வெறுப்பேயாகும்,

இஸ்லாம் மதமானது ஆரிய மதத்திற்கு (இந்து மதத்திற்கு) எதிரானதாக இருப்பதாலேயேஇஸ்லாத்தை இந்துக்கள் (ஆரியர்கள்) வெறுக்கிறார்கள்.

ஏன் எதிராய் இருக்கின்றது என்றால் இஸ்லாம் இந்து மதத்தின் அடிப்படையையே தகர்த்துவிடுகிறது.

இந்துமதம் என்னும் ஆரியமதத்திற்குப் பலகடவுள்கள், உருவக்

கடவுள்கள் உண்டு. உருவங்களும் பல மாதிரியான உருவங்களாகும்.

மக்களுக்குள் பல ஜாதி பேதங்கள் உண்டு.

பிறவிலேயே ஜாதி வகுக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் பிராமணன், சூத்திரன், பஞ்சமன் (பறையன்) என்ற உயர்வுதாழ்வுகொண்ட ஜாதியினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இந்தக் கொள்கைக்கு நாம் ஆளாகி அவற்றுள் கீழ்ஜாதியாய் இருக்கிறோம்.

இஸ்லாம் மதத்தில் ஒரு கடவுள்தான் உண்டு. அதுவும் உருவமற்ற கடவுள்தான்.

இஸ்லாத்தில்ஜாதிகள், பேதங்கள்,உயர்வுதாழ்வுகள் கிடையாது.

பிறவியின் காரணமாய் ஜாதி பாகுபாடும், மேன்மை—இழிவும் கிடையாது.

அதாவது,

இஸ்லாத்தில், பிராமணன் (மேல்ஜாதி), சூத்திரன் (கீழ்ஜாதி), பறையன் (கடைஜாதி)பஞ்சமன் என்பவர்கள் கிடையாது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இஸ்லாம் ஒரு கடவுள், ஒரு ஜாதி அதாவது ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அடிப்படையைக் கொண்டது. இந்த அடிப்படை திராவிடனுடையது; திராவிடனுக்கு வேண்டியது என்றும் சொல்லலாம்.

இந்து (ஆரிய)மதம் என்பது. பல கடவுள்கள், பல ஜாதிகள்—அதிலும் கடவுள்களால் சிருஷ்டிக்கப்பட்ட ஜாதிகள்—என்கின்ற அடிப்படையைக்கொண்டது.

இந்தப் பல கடவுள்,பலஜாதி என்கின்ற தன்மைகளால் ஆரியர்கள் [பிராமணர்கள்] நல்ல வசதியும் பயனும் அடைகிறார்கள். திராவிடர்கள் கேடும், கீழ்மையும், மனிதஉரிமைத் தடையும் அடைகிறார்கள். ஆதலாலேயே இஸ்லாத்தின் கொள்கை பிராமணர்களுக்கு மிகக் கேடானதாக இருந்து வருகிறது. திராவிடர்களுக்கு இஸ்லாத்தினால் நலம் ஏற்பட இழிவு நீங்க வசதியாகிறது.

ஆகவே தான் பார்ப்பனர்கள்[பிராமணர்கள்—ஆரியர்கள்]இஸ்லாத்தை வெறுக்கச் செய்யவேண்டியவர்களாகிறார்கள்.



இஸ்லாம் மதத்தை எல்லாமக்களும் அனுசரித்தால் பிராமணர் என்கின்ற ஜாதியே, சமுதாயமே இரா; பல கடவுள்களும், விக்கிரக [உருவ]க்கடவுளும் இருக்கமாட்டா. இந்த விக்கிரகக்கடவுள்களுக்குப் படைக்கும் பொருள் வருவாயும் நின்றுபோகும்.

இதனாலேயே இஸ்லாம் ஆரியரால் வெறுக்கப்படுகிறது; வெகுகாலமாய் வெறுக்கப்பட்டு இஸ்லாமியர்கள்மீது பல பழிகள் சுமத்தி மக்களுக்குள் வெறுப்புணர்ச்சி ஊட்டப்பட்டும் வருகிறது. ஆகவே இந்தப்படி இஸ்லாம் மதம் வெறுக்கப்படுவதினால் இஸ்லாமியரும் ஆரியரால் வெறுக்கப்பட்டும், ஆரிய மத அடிமைகளான சூத்திரர் [திராவிடர்]களாலும் வெறுக்கப்படுமாறும் செய்யப்பட்டுவிட்டது. ஆகவேதான் இஸ்லாத்தின்மீது உள்ள வெறுப்பாலேயே திராவிட இந்துக்துக்கள் என்பவர்களும் இஸ்லாமியர்களான முஸ்லிம்களை வெறுத்துப் பழகிவிட்டார்கள் என்கிறேன்.

இஸ்லாத்தைப்போல் கிருஸ்துவமதம், சீக்கிய மதம், ஆரிய சமாஜம், பிரம சமாஜம், பௌத்த சமாஜம் முதலியவை இந்துக்களால் வெறுக்கப்படுவதில்லை.

ஏன் என்றால் கிருஸ்து, சீக்கிய முதலிய மதங்களும் இஸ்லாத்துக்கு ஒரு அளவுக்கு விரோதமானவைகளாதலால் இவை இஸ்லாத்தின்பொது விரோதிகள் என்கின்ற முறையில் இந்து, கிருஸ்துவர், சீக்கியர் ஆகிய மூவருக்குள்விரோதமில்லாமல் கூடியவரை ஒற்றுமையாகவும் இருக்கிறார்கள். அநேக பார்ப்பனர்கள்கூட கிருஸ்துவ மதத்தைத் தழுவி இருக்கிறார்கள். பல பார்ப்பனர்கள், கிருஸ்துவ மதஸ்தாபனங்களில் சிப்பந்திகளாகவும் இருக்கிறார்கள். கிருஸ்துவ மதத்தைத் தழுவும் இந்து எவனும் இங்கு இந்து ஜாதிக்கொள்கையைத் தழுவ அனுமதிக்கப்படுகிறான். சீக்கியனும் அநேகமாய் இந்து மதக்கொள்கைப்படித்தான் கடவுளை வணங்குகிறான். ஆனால் உருவக்கடவுளுக்குப்பதிலாகப் புஸ்தகத்தைக் கடவுள் உருவமாய் வைத்து இந்து பிரார்த்தனை முறையில் வணங்குகிறான். சீக்கியனும் இந்துக்கள் போலவே [அவ்வளவு இல்லாவிட்டாலும்] ஒரு அளவுக்கு ஜாதிப் பாகுபாடு அனுசரிக்கிறான். சீக்கியரில் தீண்டப்

படாத,கீழ்ஜாதி மக்கள் என்று ஒரு கூட்டம் இருக்கச் செய்யப்பட்டு இருந்து வருகிறது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமைகூட அதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. தனித்தொகுதிப் போராட்டமும், சீக்கிய வகுப்புக்குள் இருந்துவருகிறது. ஆனால் ஆரியப்பத்திரிகைகள் இதை வெளியில் தெரியாமல் மறைத்துவிடுகின்றன. நான் பஞ்சாப்புக்குச் சென்றபோது நேரில் அறிந்த செய்தி இது.

கிருஸ்தவரிலும் நம் நாட்டில் தீண்டப்படாத கிருஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சிலர் படிப்பிக்கப்பட்டு உபாத்தியார் வேலைகொடுக்கப் பட்டிருப்பதோடு சரி என்பது அல்லாமல் மற்றபடி அவர்களுக்குக் கிருஸ்தவரிலாகட்டும் இந்துக்களிலாகட்டும் இஸ்லாமியர்களுக்கு அளிப்பது போன்ற உரிமைகூட அளிக்கப் பட்டிருக்கவில்லை. ஆதலால் ஆரியர்கள் கிருஸ்துவம், சீக்கியம் ஆன மதங்களுடன் நேசமாக இருக்கிறார்கள். பௌத்தம், சமணம் முதலியவைவயும் நடப்பில் இஸ்லாத்தை வெறுப்பதால் இந்துவுடன் வேஷத்தில் உறவாடுவதால் அவைகளிடம் ஆரியருக்கு அவ்வளவு வெறுப்பு இல்லை.

எனவே இஸ்லாம் மதம் பார்ப்பனர்களால் சுய லாபம், வகுப்பு நலம் காரணமாக வெறுக்கப்பட்டதாக இருப்பதால் இஸ்லாமியர்கள் (முஸ்லிம்கள்) பார்ப்பன ஆரிய அடிமைகளாலும் மூடநம்பிக்கையால் வெறுக்கப்பட்டு வருகிறார்கள். எனவே இன்றும் இந்துமதத் தலைவர்களுக்கு முஸ்லிம்களை வெறுக்கச்செய்வதல்லாமல் இந்துமதப் பிரசாரத்தின் முக்கிய தத்துவம், கொள்கை, பணி என்ன என்று யாராவது சொல்லமுடியுமா?

இஸ்லாம் யாரால் ஏற்பட்டது? புத்தர், கிருஸ்து போன்ற மற்றொரு சீர்திருத்தவாதியால் ஏற்பட்டதே அல்லாமல் வேறு என்ன?

இஸ்லாம் ஏற்பட்டதுஎதற்கு?என்றால் பல கடவுள்கொள்கை, உருவக்கடவுள் கொள்கை, மக்கள் பிறவிபேதக்கொள்கை ஆகியவைகளை ஒழித்து ஒரு கடவுள், ஒரு சமூகம் [ஜாதி] ஆக்குவதற்கும், மூடநம்பிக்கை, விக்கிரக வணக்கத்தை ஒழித்து பகுத்தறிவுக்கு இணங்கவும் ஏற்பட்டதேயாகும்.



இதை அரபியர் மதம், துருக்கியர்மதம் என்பதுபோல் இதைத் திராவிடர் மதம், அல்லது திராவிடமதம் என்று வேண்டுமானாலும் சொல்லிக்கொள்வதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. எப்படியாவது மக்கள் ஜாதிபேதம், பிறவி உயர்வு தாழ்வு, பல கடவுள், உருவ வழிபாடு ஆகியவற்றில் இருந்து விலகவேண்டும். பார்ப்பனனுக்கு அடிமையாய்இருந்து இழிவுபட்டு தலையெடுக்கமுடியாமல் இருக்கும் கேட்டிலிருந்து மீளவேண்டும் என்பதைத் தவிர வேறு கருத்து ஒன்றையும் கொண்டு நாம் இந்தப்படிச் சொல்லவில்லை என்பதைத் திராவிடர்கள் உணரவேண்டும்.

## "வெட்கக்கேடு"

பார்ப்பானிடம் அன்பு, பார்ப்பானிடம் நேசம்வைத்துப் பார்ப்பான்போல வேஷம்போட்டு நடித்துக்கொண்டு சூத்திரனாக இருக்கச் சம்மதிக்கும் ஒருவன், அதுவும் திராவிடனாக இருப்பவன் இஸ்லாமியரிடம் அன்பு, நேசம், வேஷம், நடிப்பு, நடித்து சூத்திரனல்லாதவனாக, திராவிடனாகவே இருப்பதில் என்ன வெட்கக்கேடு என்பது நமக்கு விளங்கவில்லை. மொத்தத்தில் 100க்கு 10 பேர்களான மக்களிடம் நேசம் பூண்டு கலந்து சுதந்திரத்தோடு, மானத்தோடு வாழ வெட்கமோ வெறுப்போ பட்டுக்கொண்டு, 100க்கு 3பேராய் இருக்கும் நம்மிலும் வேறுபட்ட, நம்மை இழிவுபடுத்தும் மக்களுடன் சேர்ந்தவர்களாகச் சொல்லிக்கொண்டு மானம் சுதந்திரம் இல்லாமல் இழிவாழ்வு வாழ்வதற்கு மனம் சகிக்கக் காரணம் என்னவென்றால் பார்ப்பான் நம்மை இஸ்லாத்துக்கு எதிரிகளாக ஆக்கி, அதைப் "பேய், பிசாசு, பூச்சாண்டியாக' போதித்து இருப்பதைத் தவிர வேறுகாரணம் என்ன சொல்லமுடியும்? நம்மிடத்தில் இல்லாத கெட்டப்பழக்கம் இஸ்லாத்தில் என்ன இருக்கிறது? இஸ்லாத்தில் இல்லாத நல்ல பழக்கம் நம்மிடத்தில் என்ன இருக்கிறது? நாம் எந்த நல்ல காரியத்தைச் சீர்திருத்தத்தைச் செய்வதை இஸ்லாம் தடுக்கிறது?

"கையை வெட்டினாலொழிய பிழைக்கமாட்டாய்" என்று டாக்டர் சொன்னால் வெட்டிவிட சம்மதிக்கிறோம், "காலை

வெட்டினால் ஒழிய பிழைக்கமாட்டாய்'' என்றால் காலை வெட்டி விட சம்மதிக்கிறோம், மலஜலம் கழிக்க வேறு ஓட்டைப் போட வேண்டுமென்றால் போட்டுக்கொண்டு அதில் மலஜலம் கழிக்கிறோம், எடுத்துவிட வேண்டும் என்றால் கர்ப்பப் பையை எடுத்து விடச்சம்மதிக்கிறோம், இன்னும் முக்கிய உருப்புகளை, முக்கிய பண்டங்களை இழந்தாவது உயிர் வாழ சம்மதிக்கிறோம்

அப்படி இருக்க ஒரு அயோக்கியக்கூட்டம் நம்மை ஜெயித்து, அடிமையாக்கி, தங்களுக்கு அடிமை என்கின்ற தத்துவம்கொண்ட ஒரு கொள்கையை நம்மீது பலாத்காரத்திலும், தந்திரத்திலும் புகுத்தி இழிவுபடுத்தி வைத்திருப்பதை ஒழிக்கவேண்டும் என்றால் இதற்கு இவ்வளவு யோசனை, எதிர்ப்பு, தயக்கம், வெட்கம் என்றால் இந்த இழிவு எப்பொழுதுதான் எந்த வகையில்தான் மறைவது என்று கேட்கிறேன். என்மீது கோபிப்பவர்கள் இதற்குப் பரிகாரம் சொல்லாமல் கோபித்தால் அவர்களை வெறும் வெறியர்கள் என்றுதானே அறிவாளிகள் சொல்லுவார்கள்.

கோபிக்கும் தோழர்களே! வேதசாஸ்திரங்களை, புராண இதிகாசங்களை நெருப்பிலிட்டுக் கொளுத்துவதால் சூத்திரப்பட்டம் ஒழியப்போவதில்லை, கோவில்களை இடிப்பதாலோ விக்கிரகங்களை உடைத்து தூளாக்குவதாலோ, சூத்திரப்பட்டம் ஒழியப் போவதில்லை மறுபடியும் தோசைத் திருப்புவதுபோல் பழயபடித் திருப்பி விடப் பார்ப்பனருக்குத் தெரியும், முடியும் திராவிடன் என்று சொல்லிக்கொள்வதால் மாத்திரம் சூத்திரப்பட்டம் ஒழியப்போவதில்லை. இன்றைய நிலைமையில் நான் இந்துவல்ல என்று சொல்லிக்கொண்டாலும் சூத்திரப்பட்டம் ஒழியப்போவதில்லை. இந்து மதம் இலேசில் ஒழியாது. அது பச்சோந்திபோல் சுலபத்தில் சாகும் மதமல்ல. அதைச் சாகடிப்பதற்கு நம் ஆயுளும் நம் பேரன்மார் ஆயுளுங்கூடப் போதாது. ஆகவே நாம் அதை (இந்து மதத்தை) விட்டு விலகுவதுதான், நம் ஆயுளில் முடியக்கூடிய காரியமாகும். அந்தப்படி நாம் விலகினோமேயானால் நாம் யார் என்று சொல்லிக் கொள்ள இன்றையநிலைக்கு ஒரு பெயர்வேண்டும். அதைப் பதிதாக உண்டாக்கவேண்டும், பரப்பவேண்டும், அதை இன்றைய காந்தி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யவேண்டும், அதற்குச் சட்டம், சம்பிரதாயம் செலாவணி ஏற்படவேண்டும், அதற்கு உண்டான பிரதிநிதித்துவம் உரிமை நிர்ணயித்து ஒப்புக்கொள்ளச் செய்ய வேண்டும். இவ்வளவும் செய்வதென்றால் பார்ப்பன எதிர்ப்புக்கும், சூட்சிக்கும் பனியாக்கள் ஆதரவுக்கும் முன்னால் சுலபத்தில் ஆகக்



கூடியதா? நம் செல்லிக்காய் மூட்டை சமுதாயத்தால் நினைக்கக் கூடியதா? என்பதையும் சிந்தியுங்கள். பிறகு இப்படி எல்லாம் இல்லாமல் இந்தக் கஷ்டங்களுக்கும், முடியாமைக்கும் ஆளாகாமல் ஏற்கனவே ஏற்பட்டு உலகம் பூராவும், செல்வாக்கும் செலாவணியும் பெற்று, எவரும் சிந்தித்துச் சிந்தித்து ஒப்புக்கொண்டு அமுலில் இருந்து வருவதும், நமது உண்மையானதும், உரிமையானதுமான கொள்கைகொண்டதுமாய் இருக்கும் சமுதாய சமத்துவ சமயத்தை ''நான் தழுவிக்கொண்டேன்'' என்று சொல்லுவதில் என்ன தப்பு, என்ன கஷ்டம் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

## வேறு வழி சொல்லுங்கள்

இஸ்லாம் என்றால் உங்களுக்குக் கசப்பும் கோபமும் ஏற்படக் காரணம் என்ன? இந்து என்றால் உங்களுக்கு ஒரு இனிப்பும், திருப்தியும் ஏற்படக் காரணம் என்ன என்பதை முதலில் விளங்கிக் கொள்ளுங்கள் அல்லது இதற்கு (உங்கள் சூத்திரப்பட்டம் இழிவு நீங்க உங்கள் காலத்தில்நீங்க) ஏதாவதுஒரு வழி சொல்லுங்கள். என் அபிப்பிராயத்தை நான் சொன்னேன். உங்கள் அபிப்பிராயம் நீங்கள் சொல்லுங்கள். வாதம் பிரதிவாதம் செய்துகொண்டு வம்பளந்து கொண்டே இருந்துவரும் காலம்கடத்தி நாம் சூத்திரனாக, நம் பின் சந்ததிகளையும் சூத்திரனாக இருக்கும்படி விட்டுவிட்டுச் சாவதா? இப்படியே செத்தால் பார்ப்பானுக்குத்தான் லாபம், நம் பின்சந்ததிகளால் அவனுக்குத் தெவசமும் தெய்வாராதனையும் கொடுக்கப்படும், ஆதலால் அவன் இதற்குச் சீக்கிரம் ஒரு முடிவேற்பட விட மாட்டான். நமக்குள் அடிதடி வரையில் கொண்டுவந்து விட்டு விடுவான், எனவே யோசியுங்கள், தயவுசெய்து ஆழ்ந்து கவலையோடு யோசியுங்கள். ஆரியமத அபிமானம் என்னும் வெறியை விட்டு விட்டு, மான அபிமானம் வைத்து யோசியுங்கள். கோபியாதீர்கள்.

சிந்தித்து ஒரு முடிவுக்கு வராமல், இஸ்லாம் மார்க்கமும், இந்து மார்க்கமும், இரு மார்க்க மக்களும் மூட்டிக்கொண்டால் நட்டம், அடி, உதை, சாவு திராவிடனுக்குத்தான், பார்ப்பானுக்கு எவ்வித நட்டமும் இல்லை என்பது மாத்திரமல்லாமல் அவருக்கு வரும்படி உண்டு இகலோக கோர்ட்டில் பீசு, லஞ்சம், பரலோக கோர்ட்டில் திதி, திவசம் முதலிய வைதீகச் சடங்கு இவைகளால் தானே ஆரியர்கள் இன்று மேல்நிலையில் வாழ்ந்துகொண்டு நம்மை தனது அடிமையாக, வைப்பாட்டி மகன் என்பதாகச் சட்டம், சாஸ்திரம் வகுத்து இழிவுபடுத்தினான் என்பதல்லாமல் வேறு எதனால்?

ஆகவே மறுமுறை சிந்தியுங்கள்.

# சூத்திரனாயிருக்க வெட்கப்படுகிறேன்

## மறுப்புக் கடிதத்திற்குப் பெரியார் ஈ. வெ. ரா. பதில்

பெரியார் திருச்சி கும்பகோணம் ஆகிய இடங்களில் 'இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து' என்று ஆற்றிய சொற்பொழிவு குறித்துப் பெரியாருக்கு வந்த ஒரு வசவு கடிதத்திற்குப் பெரியார் பதில்,

நண்பரே!

உங்கள் 26-3-47ந் தேதி கடிதம் பார்த்தேன். இதில் உங்கள் ஊர் பேர் போடாததற்கு மன்னியுங்கள். உங்கள் வசை மொழிகளை நான் லட்சியம்செய்து வருந்தவில்லை.

பார்ப்பனீயத்திற்கு நான் பயப்படவில்லை. பார்ப்பனீயம் என்னைப் பிணைத்துக்கொண்டு, தனது கொள்கைக்கு அடிமையாக்கிக்கொண்டிருப்பதுமல்லாமல் என்னையும் இந்தக் காலத்திலும் சூத்திரனாக்கி வைத்திருக்கிறதே என்று நான் வெட்கப்படுகிறேன். நீங்களும் சூத்திரப்பட்டத்தைச் சுமக்க இஷ்டப்படாதவர்களானால் வெட்கப்படுங்கள் என்று வேண்டிக்கொள்கிறேன்.

நவகாளியில் செத்தவர்களும், வங்காளத்தில் செத்தவர்களும், பஞ்சாப்பில் மற்றும் வடநாட்டில் செத்தவர்களும் நமக்கு ஒன்றுதான்.

அங்குள்ள இஸ்லாமல்லாதார் பெரிதும் சூத்திரப்பட்டத்திற்கு வெட்கப்படாதவர்கள். கவலைப்பட்டு நாமென்ன செய்யமுடியும். சூத்திரனாகச் சந்ததி விருத்திச்செய்துகொண்டு வாழ்வதைவிட சூத்திரப்பட்டத்தை ஒழிப்பதற்காகச் சாவது அவ்வளவு கேடானதல்ல. இனி சூத்திரப்பட்டத்திற்கு இடமில்லாத மாதிரியில் சாவுக்கு இரையாவதும் பெரிய நட்டமல்ல.



நான் இஸ்லாத்தில்சேரும்படி யாரைச் சொல்லுகிறேன்? சூத்திரப்பட்டத்தை வெறுக்கிறவர்களையும், சூத்திரப்பட்டத்தால் இழிநிலையில், பிற்பட்ட தன்மையில் இருக்கிறவர்களையும், திராவிட சமுதாயத்திற்கு மானஉணர்ச்சி, மனிதத்தன்மைஉணர்ச்சி வேண்டும் என்பவர்களையும்தான் இந்து மதத்தைவிட்டு நம் விருப்பத்திற்கு ஏற்ற இஸ்லாத்தை அல்லது அதுபோன்ற மார்க்கத்தைத் தழுவச் சொல்லுகிறேன். ஆகலால் மற்றவர்கள் பதறவேண்டியதில்லை வேறு வழி இருந்தால் செய்யுங்கள், காட்டுங்கள். ஏதோ தங்களுக்குச் சரி என்று பட்ட துறையில் வேலைசெய்கிறவர்களைத் திண்ணை வேதாந்தம் பேசிக்கொண்டு பழிக்காதீர்கள், தடுக்காதீர்கள், தொல்லை கொடுக்காதீர்கள்.

இஸ்லாமானால் வெட்கக்கேடுஎன்ன? இஸ்லாமானால் நீங்கள் யாருக்கு அடிமையாவீர்கள்? இஸ்லாமானால் உங்களை எவன் இழிவு படுத்த முடியும்? இந்தியாவில் உள்ள 12 கோடிக்கு மேற்பட்ட முஸ்லிம்களில் 10கோடி முஸ்லிம்கள் யார்? திராவிடநாட்டில் (சென்னை மாகாணத்தில்) உள்ள சுமார் 50, 60 லட்சம் முஸ்லிம்களில் சுமார் 40 அல்லது 50 லட்ச முஸ்லிம்கள் யார்? இந்துக்களும், திராவிடர்களுமாய் இருந்தவர்கள் அல்லவா? இப்படிப்பட்ட முஸ்லிம்கள் இப்போது யாருக்கடிமையாய் இருக்கிறார்கள்? அவர்கள் எதற்காக எங்கே வெட்கப்படுகிறார்கள்? சொல்லுங்கள்! காட்டுங்கள்! அவர்கள் சர்க்கார்கோருகிறபடிப் படித்தாலும் படிக்காவிட்டாலும் விகிதாச்சாரத்துக்கு மேலும் உத்தியோகம், ஜெயிலுக்குப் போனாலும், போகாவிட்டாலும் ''சுயராஜ்யத்தில்'' விகிதாச்சாரத்துக்கு மேல்பட்ட சுதந்திரம், தனித்தொகுதி மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவம், ஹைகோர்ட் ஜட்ஜிலும், சட்டசபைப் பதவியிலும் எவ்வளவு சிறிய கமிட்டிகளிலும் விகிதாச்சாரம் சரிபங்குபெற்றுச் சரிவாழ்வு வாழ்கிறார்கள்.

திராவிடர்களே! (ஆதித்திராவிடர்களே!) உங்கள் 'கதி'என்ன? உங்களுடைய இந்த ஈன நிலைக்கு நீங்கள் இந்துக்கள் ''என் பதைத்தவிர வேறு என்ன குறை இருக்கிறது? எனவே இந்துவாய்

இருப்பதற்கு வெட்கப்படாமல், வேதனைப்படாமல் இந்த இழிவை ஒழிக்க உங்கள் உயிரை எப்படிப் பயன்படுத்துவது என்று சிந்திக்காமல் "உனக்கு வெட்கமில்லையா" என்று என்னைக் கேட்கிறீர்களே! இது நியாயமா? இதனால் (இஸ்லாமாகும்படிச் சொல்வதால்) இளைஞர் மனம் என்மீது வெறுப்புக்கொண்டு விட்டது என்று மிரட்டி எனக்குக் கடிதம் எழுதுகிறீர்கள். இந்தக் காலத்து இளைஞர்கள் மனம் என்மீது (வெறுப்புக்கொள்ளாது) வெறுப்புக்கொண்டு விடுமானாலும்கூட நான் அதற்கு அஞ்சவில்லை. இனி வருங்கால இளைஞர் பாராட்டுவார்கள். பாராட்டாவிட்டாலும் இன்று நான் சொன்னதைப் பின்பற்றி வீரத்தோடு மான வாழ்வு வாழும் வழியில் இருப்பார்கள். சரியாகவோ தப்பாகவோ நான் அதில் உறுதிகொண்டு இருப்பதால் எனக்கு எக்கேடு வருவதானாலும், சாவு வருவதானாலும் மனக்குறையின்றி நிறைமனதுடன் அனுபவிப்பேன்—சாவேன் என்பதை உண்மையாய் வெளியிடுகிறேன். முதல் முதலில் இஸ்லாத்தைப் போதித்த முகமது நபிமீதும் அக்கால மக்கள் வெறுப்புக்கொண்டார்கள். (புத்தர், கிருஸ்துமீதும்தான் வெறுப்புக்கொண்டார்கள்). அப்படி இருக்க ஒரு சாதாரண, வெகு சாதாரண மனிதனாகிய நான் அதையே சொல்லும்போது என்மீதும் வெறுப்புக்கொள்ளுவது என்பது இயற்கைதான்.

ஆனால் இப்போது "எவராலும்" வெறுப்படையாதவர்களும், மாபெரும் விளம்பரத்தால் இந்திய மகாத்துமா எனப்படுபவரான காந்தியாரும், சட்டத்தாலும் காங்கரஸ் மகாஜனங்களாலும் இந்திய ஆட்சிக்குத் தலைமைப்பதவிக்கு வந்த மகாவீரதீர புருஷர் என்று எங்கும் முழக்கும்படி செய்யப்பட்டவரான பண்டித ஜவகர்லால் நேருவும், உண்மையிலேயே பல நலன்களை விட்டுவிட்டு சதாமன வேதனை அடைந்துகொண்டு பொதுவாழ்வில் உழலும் அறிவாளியான ராஜகோபாலாச்சாரியாரும் மக்களால் போற்றப்பட்டாலும் நாளைக்கு (அல்லது இன்னும் பல்லாண்டு கழிந்து) செத்துப்போனால் அவர்களால் செய்யப்பட்ட வேலை என்ன என்று குறிப்பிட



(அவர்களால் எழுதப்பட்ட சுயசரித்திரத்தைவிட உங்களுக்காக செய்யப்பட்டது என்று குறிப்பிட) என்ன காரியம் இருக்கிறது? இவ்வளவு பெருமை, இவ்வளவு ஆதரவு, இவ்வளவு வசதி அவர்களுக்கு இருந்தும் உங்கள் பிறவி இழி நிலைக்கு அவர்களால் ஆன பரிகாரம் என்ன? உயிருள்ளவரையில் பழமையைக் காப்பாற்றினார்கள் (எதாபிரியன்மார்) என்பதல்லாமல் மாறுதல் என்ன? வெறும் விளம்பரம்தானே! அதுவும் அவர்கள் கூடவே மயானத்தில் தானாக வெந்துபோகக்கூடியதுதானே!

ராஜா சர் அண்ணாமலையாருக்கு 10 கோடி, பிர்லாவுக்கு 40 கோடி, ஹைதராபாத் ராஜாவுக்கு 400 கோடி, காந்தியாருக்கும உலகமெல்லாம் விளம்பரம், ஆச்சாரியாருக்கு இந்தியாவெல்லாம் அறிவாளி என்கின்ற பெயர் என்பவையான இந்தப் பிரக்யாதி அல்லாமல் தனி மரியாதை என்ன? இதுபோலவே உங்கள் இந்துமதத்தையும்பற்றிச் சிந்தித்துப்பாருங்கள். வெள்ளையன்போவதால் உங்களுக்கு என்ன மாறிவிட்டது? உண்மையான இழிவும் இடரும் நீங்கிற்றா? இஸ்லாமியரைப் பாருங்கள். வெள்ளையன் போனவுடன் பாக்கிஸ்தான்! உங்களுக்கோ சூத்திரஸ்தான்! எனவே நான் சொல்லுவதை நீங்கள் கேட்டால் உங்களுக்கு எவ்வளவு லாபம்? உங்கள் பின் சந்ததிக்கு எவ்வளவு மேன்மை? எனக்கும் எவ்வளவு திருப்தி?

"பலாத்காரமாகப் பல இந்துக்கள் இஸ்லாமாக்கப்பட்டார்கள்" என்று சதா இந்துக்கள் முஸ்லிம்கள்மீது பழிசுமத்தி விஷமப்பிரசாரம் செய்கிறார்கள்.

நான் பலாத்காரம் செய்கிறேனா? மதமாறுகிறவர்களைப்பலாத்காரத்தால் ஆரியர்களும் அவர் கூலிகளும் தடுக்கிறார்கள் என்பதல்லாமல் இதன் பொருள் என்ன? இதில் என்னிடம் என்ன பலாத்காரமிருக்கிறது? "சிந்தித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள்! என் முடிவு இது" என்று உங்களைக் கெஞ்சுகிறேன். பலாத்காரம் எதுவும் இல்லை. பலாத்காரம் செய்ய என்னிடம் ஒரு சக்தியும் இல்லை. இதுவரை இந்தியாவில் உள்ள 10 கோடி இஸ்லாமான

வர்களிடமிருந்தாவது அல்லது ஒரு இஸ்லாமானவரிடமிருந்தாவது ஒரு சிறு கூப்பாடு, கூக்குரல்—அதாவது என்னை இஸ்லாமாக்கி கெடுத்துவிட்டார்களே என்ற முறையீடு வந்ததா? அல்லது எந்த இஸ்லாமானவராவது, காந்தியார் மகன் (அப்துல்லா காந்தி) அல்லாமல் வேறு யாராவது தானாக இஸ்லாத்தில் இருந்து இந்துவானாரா? காந்தியார் மகன்கூட "பணம் வாங்கிக்கொண்டு தான் (பணத்தாசையால்) மறுபடியும் இந்து ஆனார்" என்று அப்போதே சொல்லப்பட்டது.

'சுயராஜ்ய சர்க்காரில் இன்று உங்களுக்கு—திராவிடருக்கு சாதி இல்லை. அரசியல் நிர்ணயசபையில் உங்களுக்கு—(சூத்திரப் பட்டம் வேண்டாம் என்கின்ற திராவிடனுக்கு) கேள்வி கேட்பாரில்லை. ஆசியா உறவு மகாநாட்டில் நீங்கள் ஒரு கூட்டம் இருப்பதாகக்கூடத் தெரியாது. இந்த நிலையில் உள்ள உங்களுக்கு இஸ்லாம் என்றால் சிகப்புத்துணி பறப்பதைக்கண்ட மாடுபோல் நடுக்கமேன்? பதட்டமேன்? ஆத்திரமேன்? அவதியேன்?

தோழர் காந்தியார் குரானும், கீதையும் ஒன்று என்கிறார். 'ராமனுக்குத்தான் ரஹீம்—அல்லா என்கின்ற பெயர்' என்கிறார். "இந்துக் கடவுள் இஸ்லாம் கடவுள் ஒன்றே" என்கிறார். "நான் சதா ராம் ரஹிம் என்று பஜித்துக்கொண்டே இருக்கிறேன்" என்று சொல்லுகிறார். "சாகும்போதும் ராம் ரஹிம் என்று சொல்லிக்கொண்டுதான் உயிர் விடுவேன்" என்கிறார்.

"ராம்—ரஹீம் என்கின்ற பெயர்களைச் சமமாக எண்ணி உச்சரிக்காவிட்டால் நவகாளி இந்துக்கள் முகத்திலும், பீகார் முஸ்லிம்கள் முகத்திலும் நான் எப்படி விழிப்பது" என்கிறார். [இவை 5-4-47ந்தேதி தினமணியில் இருக்கின்றன] இப்படியெல்லாம் இருக்க அதாவது மக்கள் முகத்தில் தற்கால சாந்தியாய் விழிக்கவேண்டிய ஒரு சின்னகாரியத்திற்காக இஸ்லாமும் இந்துவும் ஒன்றுதான் என்று சொல்லி காங்கரஸ் தலைவரே மக்களுக்குப் போதிக்கும்போது ஒரு பெருத்த இழிவு, தடை, நீங்கி மனிதத் தன்மையும், மானமும்பெற்று, பலகோடிக்கணக்கான மக்களோடு



சகோதரத்தன்மை பெற்று நிரந்தர சமாதானம், நிரந்தர சமத்துவம், நிரந்தர சம உரிமை, நிரந்தர சுதந்தரம் பெறுகிற காரியத்துக்கு அதுவும் உண்மையாக நடக்கிற காரியத்துக்கு இஸ்லாத்தை [ஒரு கடவுள், ஒரு ஜாதி உடன்பிறப்பு உணர்ச்சி] பின்பற்றுங்கள் என்று, அதுவும், மான உணர்ச்சியும் இழிவு வெறுப்பும் உள்ள மக்களுக்குத்தான் என்று நான் சொன்னால் மற்ற மக்கள் ஏன் ஆத்திரப்பட வேண்டும் என்று கேட்கிறேன்.

சமீபகாலம்வரை தீண்டாமை விலகவேண்டும், தீண்டத்தகாதவர்கள் என்கின்ற தன்மை மாறவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் உடனே இஸ்லாமாக ஆகவேண்டும் என்று சொல்லி 20 வருட காலம் பிரசாரம் செய்து அந்தச் சமுதாயத்தாரையும் ஒப்புக்கொள்ளும்படிச் செய்தேன்.

மலையாளத்திலும் [திருவாங்கூர், கொச்சியிலும்] 1924 முதல் 34 வரை பிரசாரம் செய்து மலையாள ஈழவர்களையும், மற்றும் தீண்டப்படாத மக்கள் என்பவர்களையும் ஒப்புக்கொள்ளச் செய்தேன். இவர்கள் ஒப்புக்கொண்டு தங்கள் மகாநாட்டில் தீர்மானங்கள் செய்து சுமார் மொத்தத்தில் இங்கு 2000, 3000 பேரும் மலையாளத்தில் சுமார் 600, 700 பேர்களும் இஸ்லாத்தைத் தழுவியவுடன் அவர்கள் இழிவுகள் சிறிது சிறிதாக நீக்கப்பட்டு அவர்களது உரிமைகள் இன்று வழங்கப்பட்டுத் தீரவேண்டிய அளவுக்கு வெற்றி ஏற்பட்டுவிட்டது. திருவனந்தபுர ஆலயப் பிரவேசம், கொச்சி [எண்ணிக்கைக்கு ஏற்ற] வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எதனால்? இஸ்லாத்தாலா? இந்து தர்மத்தாலா?

நேற்று சென்னை சட்டசபையில் ஆலயப்பிரவேச மசோதாவைப் பிரேரேபித்த பார்ப்பனராகிய டாக்டர் ராஜன் என்ன சொல்லிப் பிரேரேபித்தார்?

"இந்து சமுதாயம் நாளுக்குநாள் குறைந்து பலவீனமடைந்து

போகாமல் இருப்பதற்கு [இந்து மதத்தைக் காப்பதற்கு] ஆக இந் ஆலயப்பிரவேச மசோதாவைப் பிரேரேபிக்கிறேன்"

என்று சொன்னாரே ஒழிய, மக்களுக்குக் கடவுள் தரிசனம் கடவுள் பிரார்த்தனை, கடவுள் பிரசாதம் கிடைத்துச் சீக்கிர மோட்சம் கிடைக்கவேண்டுமென்றோ, மக்கள் பக்தியால் பாவம் மன்னிக்கப்பட்டு மோட்சத்துக்குப் போகவேண்டுமென்பதற் காகவோ பிரேரேபிக்கிறேன் என்று சொல்லவில்லையே! இதன் அர்த்தம் என்ன? திராவிடர்களை நிரந்தரமாய்ச் சூத்திரர்களா வைத்து இருக்கச்செய்யும் சூழ்ச்சிதானே இது? கோபிக்கும்—ஆ திரப்படும்—மொக்கைகளுக்கு இது தெரியவேண்டாமா என் கேட்கிறேன்.

சூத்திரன் என்கின்ற பட்டம் இழிவு என்று கருதுகிறவ களுக்குத்தான் நான் இந்த யோசனை சொல்லுகிறேனே ஒழிய சூத்திரப் பட்டத்தைப்பற்றிக்கவலை இல்லை என்பவர்களுக்கு இதைச் சொல்லுவதில்லை.

சூத்திரப்பட்டத்தைப்பற்றிக் கவலைப்படுகிறவர்களையும்கூட சூத்திரப்பட்டம் ஒழிய வேறு வழி இருந்தால் சொல்லுங்கள் என்று கேட்டுவிட்டுத்தான் நான் இதைச் சொல்லுகிறேனே தவிர மற்றபடி அவசரப்பட்டு ஆணவத்தால் இதைச் சொல்ல வில்லை.

ஆகவே ஆத்திரப்பட்டு,வைது கடிதம்எழுதின தோழர்களையும், கடிதம் எழுதாமல் என்னைச் சிறு கூட்டத்தில் வைதுகொண்டு விஷமப் பிரசாரம்செய்யும் தோழர்களையும் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

தமிழ் நூலகம்
09301
தமிழ்நகர் விருத்தாசலம் -

Tamilan Press, Erode.